# பொதுக்காலம் 31ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 31ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தி, சக்கேயுவின் வாழ்வில் இயேசு மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வை எடுத்துரைக்கின்றது. சக்கேயுவின் உருவம் இயேசுவைக் காண்பதற்குத் தடையாக இருந்த போதிலும், அவன் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவன் உள்ளத்தில் இயேசுவைக் காண வேண்டுமென்ற தாக்கம், ஆவல் அவனைச் சிறுபிள்ளை போல மரத்தின்மீது ஏற வைத்தது.

மரத்தின்மீது ஏறியதைக் குறித்து பிறர் ஏளனம் செய்வார்களோ, கேலி செய்வார்களோ என்றெல்லாம் அவன் மனதில் துளியளவு கூட எண்ணவில்லை. அவன் உள்ளத்தின் உணர்வெல்லாம் இயேசுவைக் காண வேண்டுமென்பது மட்டுமே. தன்னை ஆவலோடு தேட முன்வந்த சக்கேயுவை இயேசுவும் கண்டு கொள்கின்றார். வழிமாறிப் போகும் ஆட்டைத் தேடி மீட்கும் நல்ல ஆயனல்லவா அவர். ஆதலால் சக்கேயுவை சரியாகப் பிடித்து விடுகின்றார். “உன் வீட்டில் தங்க வேண்டும்” என்று மட்டுமே இயேசு அவனிடம் கூறுகின்றாரே ஒழிய, அவன் பாவியென்றோ, அவன் செய்த பாவங்களைக் குறித்தோ எதுவும் அவர் கூறவில்லை. ஆனால், சக்கேயு, தம் வீட்டில் இயேசு தங்க வேண்டும் என்று கூறியதுமே, தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, தம் பாவங்களுக்கு பரிகாரத்தைத் தேடியதன் வழியாக இயேசுவிடமிருந்து மீட்பை பரிசாக பெற்றுக் கொள்கின்றார்.

நாம் நற்கருணையில் எழுந்தருளியுள்ள இறைமகனை எந்த அளவிற்கு பார்ப்பதில் தாகமாய், ஏக்கமாய், ஆவலாய் இருக்கின்றோம். நம் வரவுக்காக அவர் காத்திருக்கின்றார். ஆனால், நாம் அவரைத் தவிர, உலக சிற்றின்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவருக்கு சிறிது நேரம் கூட ஒதுக்க இயலாதவர்களாக வாழ்க்கையின் ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றோம். அவர் பார்வை நம்மை விட்டு அகன்று விடாமல், அவரை இறுக பிடித்துக் கொள்ள இனி முற்படுவோம். அவரையே நம் வாழ்வின் மையமாக்கிடுவோம். சக்கேயுவைப் போல, எல்லாத் தடைகளையும் மீறி, இயேசுவைக் காண்பதில் தாகமுள்ளவர்களாக அவரிடம் செல்வோம். இயேசுவை நம் வாழ்வில் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு, அவர் தரும் மீட்பை பெறத் தகுதியுள்ளவர்களாக நம் பாவங்களிலிருந்து விடுபடுவோம். இறைப்பிரசன்னத்தில்

இறைமகனோடு இணைந்திருக்கும் இதயத்தைப் பெற்றிட இறையாசீர் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நாம் சரணடைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. "என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன், மதிப்பு மிக்கவன், நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்" என்ற இறைவா,

இந்த உலகம் பிறர் வாழ்வை எப்போதும் விமர்சனம் செய்து, குறை கூறி அவர்களின் திறமைகள், ஆற்றல்கள் இவற்றை ஏற்றுக் கொள்ளாது, கீழே வீழ்த்த முற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களின் விமர்சனங்கள், ஏற்றுக் கொள்ளாத நிலையில் மனம் சோர்ந்து, தளர்ந்திடாது, திறமைகள், உழைப்பை முடக்கி விடாது, எத்தகைய நிலையிலும் முன்னேற்றப் பாதையிலிருந்து விலகிடாது, அவர்களின் தரமற்ற விமர்சனங்களை புறம் தள்ளி, இந்த உலகம் ஒதுக்கினாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், நாங்கள் உமது பார்வையில் மதிப்புக்குரியவர்களாக இருக்கிறோம் என்ற உள்ளார்ந்த நிறைவுடன், வாழ்வின் கடமைகளை, பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றக்கூடிய, இலட்சியங்களில் தொடர்ந்து பயணிக்கக்கூடிய திடமான, வலிமையான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. "தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன்" என்ற இறைவா,

வாழ்வில் ஆதரவற்று, துணையின்றி, ஆறுதலின்றி தவிக்கும் மாந்தர்களை, அவர்களின் மனத் துயரை, மனப்பாரங்களை, கண்ணீரைக் கண்ணோக்கும். அவர்களின் மனத்துயரை மாற்றிட, உடனிருந்து ஆறுதல், அன்பை அளித்து, அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களைத் தேற்றி, அவர்கள் வாழ்வு ஏற்றம் கண்டிடும் வகையில், அவர்கள் மகிழ்வில் உம்மைக் காணும் மாந்தர்களாக நாங்கள் வாழ்ந்திடக் கூடிய, நல் இதயத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

3. "வலிமை உடையவரைவிடப் பொறுமை உடையவரே மேலானவர்" என்ற இறைவா,

முப்பத்தெட்டு ஆண்டுகளாக குளத்தில் இறக்கிவிட ஆளின்றி, எத்துணை பொறுமையோடு காத்திருந்த, மனிதருக்கு நீர் சுகம் தந்து வாழ்வு கொடுத்தீர், பதினெட்டு ஆண்டுகளாக தீய ஆவி பிடித்து, கூன் விழுந்து உடல்நலம் குன்றிய பெண்ணைக் குணப்படுத்தினீர். இவர்களின் பொறுமை இன்று எங்களிடம் காணாமற் போய்விட்டது. இன்று மாந்தர்களிடம் இல்லாத ஒரு "மை"யாக பொறுமை வலம்

வருகிறது. எதையும் காத்திருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு, பொறுமையில்லாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உடன் வாழும் மாந்தரிடமும், பணித்தளத்திலும், எங்கள் விசுவாச வாழ்விலும் பொறுமையிழந்து, எரிச்சல்பட்டு, நிம்மதியின்றி வாழும் மனநிலையை மாற்றி, பொறுமை என்னும் உன்னத பண்பினைப் பெற்று, வாழ்ந்திட, வரமருள, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

4. "கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" என்ற இறைவா,

உம் திருமுன்னிலையில் இணைந்த இதயங்கள், தற்போது சில ஆண்டுகளிலே, ஏன் சில மாதங்களில், நாட்களில் கூட நீதிமன்றத்தின் முன் நீதிபதியின் முன்னிலையில் பிரிந்து செல்லும் அவலநிலை வேகமாக அரங்கேறிக் கொண்டு வருகிறது. இன்று, கணவன், மனைவியிடம், விட்டுக் கொடுத்து செல்லாத நிலை, புரிந்து கொள்ளாத நிலை, நீயா நானா என்ற மனநிலை மேலோங்கி நிற்பதால், விவாகரத்துக்கள் விரைவாக உறவை விடைபெறச் செய்கின்றது. இத்தகைய தவறான மனநிலைகளை மாற்றி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, புரிந்து கொண்டு, உம் முன்னிலையில் கொடுத்த வாக்குறுதியை இறுதிவரை காப்பாற்றுபவர்களாக, தங்கள் இல்லற வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய பிரமாணிக்கமான மனதினை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. "ஒரு சொல் ஒரு கொடையை விட மேலானது" என்ற இறைவா,

நாங்கள் பேசுகின்ற வார்த்தைகள், பலரைக் காயப்படுத்துவதாக, வீழ்த்துவதாக, கண்ணீரில் ஆழ்த்துவதாக அமையாமல், பலரும் பயன்பெறக்கூடிய பண்பான, கனிவான, ஊக்கம் தரக்கூடியதான வார்த்தைகளாக அமைந்திடவும், எங்கள் வீண் வார்த்தை ஒவ்வொன்றுக்கும் நாங்கள் கணக்கு கொடுக்கும் வேண்டுமென்பதை உணர்ந்தவர்களாக, தவறான வார்த்தைகளைப் பேசாமல், எங்கள் நாவைக் காத்துக் கொள்ளவும், இனிய சொற்களால், பல இதயங்களை இதமாக்கி, இன்பத்தைக் கொடுக்கவும், தேவையற்ற வார்த்தைகளைத் தவிர்க்கவும், எங்கள் நாவினை பயன்படுத்திட ஆற்றல் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com